[2022 ஏப்ரல் 27

189—

மின்மாற்றி

***5339—திரு. அ.செ. வில்வநாதன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், அரங்கல்துருகம் ஊராட்சி. மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், அரங்கல் துருகம் ஊராட்சி, அரங்கல்துருகம் பகுதியில் மின் நுகர்வோர்களின் தேவை அதிகரித்த காரணத்தினால், அரங்கல்துருகம் பகுதியில் உயர்நிலைப் பள்ளி அருகே 100 கிலோ வோல்ட் திறன் கொண்ட புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டு, 1–12–2021 அன்று மாண்புமிகு ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன் அவர்கள் முன்னிலையில் மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.*

திரு. அ.செ. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், அரங்கல்துருகம் ஊராட்சியில் நான் கேட்டதும் உடனடியாக 100 KVA புதிய மின்மாற்றி அமைத்துத் தந்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது கோரிக்கையினை ஏற்று, எனது தொகுதியில், நான் கேட்ட குமாரமங்கலம் ஊராட்சியில் 33/11 கிலோ வாட் துணை மின் நிலையத்தை 2021–2022 ஆம் ஆண்டு அறிவிப்பில் அறிவிக்கச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 110/11 KV *விண்ணமங்கலம் துணை மின் நிலையத்திலிருந்து புதியதாக அமைத்துக்கொண்டிருக்கிற 11* KV *விண்ணமங்கலம்* feeder*–ஐ மும்முனை மின்சாரமாக மாற்ற அரசு முன்வருமா? அப்படி மாற்றி வழங்கும்பட்சத்தில், விண்ணமங்கலம், அய்யனூர், கண்ணாடிகுப்பம், ஆலாங்குப்பம், பெரியாங்குப்பம், போளூர் ஆகிய ஊராட்சிகளிலுள்ள தொழிற்சாலைகள், விவசாயிகள் என சுமார் 25,000 பொதுமக்கள் பயனடைவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கூறி அமைகின்றேன்.*

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன், நன்றி சொல்லிவிடலாமே!*

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு நகரில்* A.D.E. *அலுவலகம் செயல்பட்டு வருகிறது. அதைப் பிரித்து, புதியதாகப் பிரிக்கப்பட்ட திருப்பத்தூர் மாவட்டம், சின்னவரிக்கம் துணை மின் நிலையம் மற்றும்* J.E. *அலுவலகம் உள்ள இடத்தில் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் இணைப்புகளின் எண்ணிக்கைகளுக்கேற்ப புதிய அலுவலகங்கள் உருவாக்கப்பட*

[2022 ஏப்ரல் 27

வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய அலுவலகத்தினுடைய மின் இணைப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பாபநாசம் தொகுதியில், பாபநாசம் தாலுகா மற்றும் அருகிலுள்ள திருவாரூர் மாவட்டத்திலுள்ள வலங்கைமான் தாலுகாவிலுள்ள சில கிராமங்களை ஒன்றிணைத்து, தற்போது ஒரத்தநாடு மின் கோட்டம் அமைந்திருக்கின்றது. என்னுடைய தொகுதி கிராமங்கள் நிறைந்த தொகுதியாகும். மின் பிரச்சினைகள் தொடர்பாக நீண்ட தூரம், ஒரத்தநாடு செல்ல வேண்டிய ஒரு சூழல் இருக்கிறது. இதன் காரணமாக, சீரான மின்சாரம் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகின்றது. எனவே, புதியதாக சாலியமங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மின் கோட்டம் அமைப்பதற்கும், அந்த மின் கோட்டத்திற்குள்ளே பாபநாசம் உட்கோட்டம், சாலியமங்கலம் உபகோட்டம், சூரக்கோட்டை உபகோட்டம் ஆகியவற்றை அமைத்துத் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 புதிய மண்டலங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். கோட்டங்கள் உருவாக்குவது சம்பந்தமாக, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய 3 கோடியே 24 இலட்சம் மின் இணைப்புகள் குறித்து கணக்கீடுகள் எடுக்கப்பட்டு, எந்தெந்த இடங்களில் புதிய கோட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பது குறித்து

2022 ஏப்ரல் 27]

துறைரீதியாக பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய அந்த பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, வரும் ஆண்டுகளில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 190, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

190—

அரண்மனையைப் புனரமைத்தல்

***3879—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *குளச்சல் தொகுதிக்குட்பட்ட இரணியல் அரண்மனையைப் புனரமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *இரணியல் அரண்மனையை 3 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைப்பதற்கு 2013–2014 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்க காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாக, 2019 ஆம் ஆண்டு அதற்குரிய ஆணை வழங்கப்பட்டது. அந்த ஒப்பந்ததாரர் திருத்தணியைச் சேர்ந்தவர். கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக, முழு அடைப்பின் காரணமாக, அந்தப் பணியை அவரால் உடனடியாக மேற்கொள்ள முடியவில்லை. 31–9–2020 அன்று அந்தப் பணிகளை ஏற்றுக்கொண்டு, தொல்லியல் துறை நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்து, தற்போது அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன*